பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | கார்த்திகை 10 | புதன்கிழமை | 25.11.2020 | கதிர் 251

# பொது இடங்களில் ஒன்றுகூடி நினைவேந்தல் நடத்த முடியாது

## யாழ். நீதிவான் நீதிமன்றம் கட்டளை

**பொது இடங்களில் மக்கள் ஒன்றுகூடி நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியாது என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.**

**மாவீரர் நாள் நினைவேந்தலைத் தடை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கே யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இந்தக் கட்டளையை வழங்கியுள்ளது.**

6

## ரிஷாத்துக்குப் பிணை



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

6

## திருமலை மீனவர் கடலில் உயிரிழப்பு



திருகோணமலை - திருக்கடலூர் பகுதியில் இருந்து இன்று அதிகாலை படகொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மீன்பிடிப்பதற்காக சிறிய படகொன்றின் மூலம் நான்கு பேர் கடலுக்குச் சென்றுள்ளனர் எனவும், அவர்களில் ஒருவரே

2

## நினைவேந்தலுக்கத் தடை கோரி பொலிஸ் இன்று மீண்டும் வழக்கு

### பருத்தித்துறை நீதிமன்றின் கட்டளை நாளை அறிவிப்பு

மாவீரர் நினைவு நாளில் அஞ்சலி செலுத்துவதைத் தடை செய்யுமாறு கோரி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் இன்று மீண்டும் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குக்கான கட்டளையை நீதிமன்றம் நாளை வழங்குவதாக அறிவித்துள்ளது.

ஏற்கனவே நினைவேந்தல் நிகழ்வைத்

2

## ஐ.நா. தீர்மானத்திலிருந்து விலகிவிட்டோம்; இலங்கையுடன் சர்வதேசம் முட்டி மோதாது!

### சபையில் அடித்துக் கூறியது ராஜபக்ஷ அரசு



இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானத்தின், இணை அனுசரணையில் இருந்து இலங்கை தற்போது விலகியுள்ளது. எனவே, சர்வதேச ரீதியாக எந்தவொரு பிரச்சினையும் நாட்டுக்கு ஏற்படாது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று இடம்பெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2

## முல்லைத்தீவில் மீளவும் இயங்கும் தனிமைப்படுத்தல் நிலையங்கள்!

### இதுவரை 6 பேருக்குக் கொரோனா உறுதி

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் மீண்டும் கொரோனாத் தொற்று எனச் சந்தேகிக்கப்படுகின்றவர்கள் கொண்டுவரப்பட்டு தனிமைப்படுத்தல் செயல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

ஏற்கனவே கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில்

2

## 3 ஆவது நாளாகவும் தொடரும் சிறைக்கைதிகள் ஆர்ப்பாட்டம்

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அங்குணகொளபெலஸ்ஸ சிறைச்சாலையில் கைதிகள் முன்னெடுத்து வரும் ஆர்ப்பாட்டம் இன்று 3ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

தமது கோரிக்கைளை முன்வைத்து முதல் நாளில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்த கைதிகள், தற்போது சிறைச்சாலைக் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சிறைச்சாலையின் 'ஏ' சிறைக் கூடத்தின் கூரை மீது 10 கைதிகளும், 'சீ' சிறைக் கூடத்தின் கூரை மீதேறி 5 கைதிகளும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகள், தமது கோரிக்கைகளைப் பதாதைகள் மூலம் காட்சிப்படுத்தியவாறு

2

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்னால் தனிநபர் போராட்டம்



கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் போராட்டத்தை முன்னெடுத்தார்.

குறித்த போராட்டம் இன்று காலை 10 மணியளவில் மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்றது.

தனது காணியின் ஊடாக கழிவுநீர் வாய்க்கால் ஒன்றை அமைக்க கரைச்சி பிரதேச சபை தவிசாளர்

2

## புயலால் யாழில் இதுவரையில் 96 பேருக்கு பாதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , நவ.25

நிவர் புயல் காரணமாக யாழ்ப்பாணத்தில் இதுவரை 27 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் பாதிப்படைந்துள்ளனர் என யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் மேலும் விவரம் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் இதுவரை 103 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி

2

## ஹெரொயின், 5 துப்பாக்கிகளுடன் இலங்கைப் படகில் ஏழு பேர் கைது

### தூத்துக்குடி கடல் பகுதியில் சம்பவம்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,நவ.25

இந்தியாவின் தூத்துக்குடி கடல் பகுதியில் அனுமதியின்றி சுற்றித்திரிந்த இலங்கை படகினை இந்தியக் கடலோரக் காவல்படையினர் சுற்றிவளைத்துச் சோதனை செய்ததில்



2

## ரணிலுக்குப் பதிலாக ருவான்!

### ஐ.தே.க. உறுப்பினர்கள் கோரிக்கை



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற ஆசனத்தை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ள மறுத்தால், பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தனவை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என கட்சியின் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2

## பிட்டுக் கதைக்கு யாழ். நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்ட பொலிஸ் அதிகாரி!



பிட்டுச் சாப்பிட்டு வந்த யாழ்ப்பாணத்தவர்களை பீட்ஸா சாப்பிட வைத்தோம் என்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் தான் கூறிய கருத்து தமிழ் மக்களைக் காயப்படுத்தியிருந்தால் அதற்காக இன்று திறந்த நீதிமன்றத்தில் பகிரங்க மன்னிப்புக் கோரினார் யாழ். மாவட்டத் தலைமை பொலிஸ் அதிகாரி பிரசாத் பெர்னாண்டோ.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாள் நிகழ்வை நடத்துவதற்கு 37

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஐ.நா. தீர்மானத்தை வலுப்படுத்த முழு ஒத்துழைப்பு வழங்கும் சுவிஸ்

## சுமந்திரன் எம்.பிடம் அந்நாட்டுப் புதிய தூதுவர் உறுதி



தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், இலங்கைக்கான சுவிட்சர்லாந்து புதிய தூதுவர் டொமினிக் ஃபர்க்லரை இன்று கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தூதுவருடன் ஐ.நா. தீர்மானம், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் இலங்கையின் சமகால நிலைமைகள் குறித்து விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டார் என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்தை வலுப்படுத்த சுவிட்சர்லாந்து முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று இதன்போது தூதுவர் வாக்குறுதியளித்தார் என்றும் சுமந்திரன் எம்.பி. மேலும் கூறினார்.

## ரணிலுக்குப் பதிலாக ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கியதேசியக்கட்சியின்தேசியப்பட்டியல் நாடாளுமன்ற வெற்றிடத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்த போதும், அவர் அதனை மறுத்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற ஆசனத்தைக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ள மறுத்தால், பிரதித்தலைவர் ருவான் விஜேவர்தனவை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என கட்சியின் சில உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கட்சியின் நாடாளுமன்றத் தேசியப்பட்டியல் விடயம் தொடர்பாக அடுத்த வாரம் இறுதித்தீர்மானமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து விலகுவதாக அகிலவிராஜ் காரியவசம் வழங்கிய இராஜிநாமாக் கடிதத்தையும் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

## பிட்டுக் கதைக்கு யாழ். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேருக்கு எதிராகத் தடை கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது நடந்த விசாரணையின் நடுவே இந்த மன்னிப்புக் கோரல் சம்பவமும் இடம்பெற்றது.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் பொறுப்பதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்ட இந்தத் தடை கோரல் மனுக்கள் மீதான விசாரணைக்காக கொழும்பு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து மூத்த உதவி சொலிஸ்சிட்டர் ஜெனரல் கரிப்பிரிய ஜெயசுந்தர வருகை தந்திருந்தார். மூத்த உதவி சொலிஸ்சிட்டர் ஜெனரல் பிரபாகரன் குமாரரட்ணம், மூத்த அரசசட்டவாதி ஜனக பண்டார ஆகியோரும் அவருடன் வருகை தந்திருந்தினர்.

மனுக்கள் மீதான தனது சமர்ப்பணத்தை முடித்துக்கொண்ட மூத்த சொலிஸ்சிட்டர் ஜெனரல் கரிப்பிரிய ஜெயசுந்தர, தனது முகக் கவசத்தை அகற்றித் முழுமையாகத் தனது முகத்தை அங்கிருந்த சட்டத்தரணிகளுக்கும் ஏனையவர்களுக்கும் காட்டிய பின்னர், தான் யார் என்பதை அவர்கள் அனைவரும் பார்ப்பதற்காக அப்படிச் செய்தார் என்பதைக் குறிப்பிட்டார். பின்னர், துரதிஷ்டவசமாக இந்த நீதிமன்றத்திலே நடந்த ஒரு வழக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத் தலைமைப் பொலிஸ் அதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்த ஒரு கருத்து இந்த நீதிமன்றம், இங்கிருக்கும் சட்டத்தரணிகள் மற்றும் மக்களைக் காயப்படுத்தியிருந்தால் அதற்காகப் பொலிஸ் அதிகாரி சார்பில் தான் பகிரங்க மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றார் என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் உணவுக் கலாசார பழக்க வழக்கங்களைக் குறிப்பிட்டுக் காயப்படுத்தும் நோக்கத்தோடு அவர் அந்தக் கருத்தைத் தெரிவிக்கவில்லை என்றும், முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க இப்போது நிலைமை முன்னேற்றம் அடைந்திருக்கின்றது என்பதைத் தெரிவிப்பதே அவரது உள்நோக்கமாக இருந்தது என்றும், எனினும் தவறுதலாகப் பிழையானதொரு உதாரணத்தை அவர் எடுத்துக் கையாண்டு விட்டார் என்றும், அந்தத் தவறுக்காகத் தமது மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.'

கரிப்பிரியவின் அந்தக் கருத்தைத் தொடர்ந்து தனது முகக் கவசத்தையும் அகற்றித் தனது முகத்தை முழுமையாக வெளிப்படுத்தி பொலிஸ் அதிகாரி பிரசாத் பெர்னாண்டோ, அங்கிருந்த சட்டத்தரணிகளையும் சபையையும் பார்த்து இரண்டு தடைவைகள் 'சொறி' (மன்னித்துக்கொள்ளுங்கள்) என்று தெரிவித்தார்.

விவாதத்தின் நடுவே இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த மூத்த சட்டத்தரணி ந.சிறீகாந்தா, பொலிஸ் அதிகாரி தெரிவித்த கருத்து நீதிமன்றத்தில் இருந்த சட்டத்தரணிகளைப் பொறுத்தவரையில் ஒரு பொருட்டாக இருக்கவில்லை என்றார். அது குறித்து வெளியே எந்த வகையிலான கருத்துக்கள் பகிரப்பட்டாலும் அது இந்த நீதிமன்றத்திலே யாரையும் பாதிக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

## கிளிநொச்சி மாவட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முற்பட்டார் எனவும், அதற்கு மாவட்ட அரச அதிபர் தெளிவான பதிலை வழங்க வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தே குறித்த நபர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இன்று செயலகம் வருகை தராத நிலையில் மாவட்ட மேலதிக அரச அதிபர் சிறிமோகன் குறித்த நபருடன் கலந்துரையாடினார்.

தீர்மானம் எடுக்கக்கூடியவர் அரச அதிபர் என்பதால் அவர் வருகை தந்ததும் அவருடன் பேசி தீர்வைப் பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் தெரிவித்த நிலையில் குறித்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

## ஹெரொயின், 5 துப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பல கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐந்து துப்பாக்கிகளுடன் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பறிமுதல் செய்யப்பட்ட போதை பொருள் மற்றும் படகு என்பன நாளை காலை தூத்துக்குடி கடலோர காவல் படை முகாமை அடைந்த பின்பே முழுமையான விவரம் அறியக் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பலில் பாகிஸ்தானியர்கள் ஐவரும் இருந்துள்ளனர் என ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

## புயலால் யாழில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சில் பகுதிகளில் காற்றின் தாக்கமும் காணப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் இதுவரை 27 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் பாதிப்படைந்துள்ளனர். அதேபோன்று இரண்டு வீடுகள் முழுமையாக சேதமடைந்தமையோடு 19 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என இதுவரை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பருத்தித்துறை பகுதியிலேயே அதிகளவில் 11 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. - என்றார்.

## முல்லைத்தீவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கேப்பாப்பிலவு விமானப்படைத்தளம், கேப்பாப்பிலவு 59ஆவது படைப்பிரிவின் இராணுவப்பயிற்சி பாடசாலை, புதுக்குடியிருப்பு திம்பிலி 68 ஆவது படைப்பிரிவின் இராணுவப் பயிற்சி பாடசாலை ஆகிய 3 தனிமைப்படுத்தல் நிலையங்கள் இயங்கி வந்த நிலையில் அவை, வீடுகளிலேயே தனிமைப்படுத்தல் செயற்திட்டங்கள் இடம்பெறும் என்ற இராணுவத் தளபதியின் அறிவிப்பைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து விமானப்படையுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துகின்ற நோக்கத்தோடு கடந்த 21ஆம், 22ஆம் திகதிகளில் கேப்பாப்பிலவில் விமானப்படைத் தளத்தில் விமானப் படையுடன் தொடர்புடையவர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் 145 பேர் கொண்டுவந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஒரு தொகுதியினருக்கு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் இருவருக்குத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில் அவர்கள் கொரோனா சிகிச்சை வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர்

இன்னும் ஒரு தொகுதியினருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த நபர்களில் நான்கு பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருப்பது அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்கள் மருதங்கேணி வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் மூடப்பட்டிருந்த மற்றுமொரு தனிமைப்படுத்தல் நிலையமான 59ஆவது படைப்பிரிவின் இராணுவப் பயிற்சி பாடசாலைக்கு டுபாயிலிருந்து நாடு திரும்பிய 17 பேர் இன்று அதிகாலை ஒரு மணியளவில் கொண்டுவரப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூடப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டு வருகிறதோடு இது வரை தனிமைப்படுத்த நிலையங்களிலேயே தனிமைப்படுத்தப்பட்ட 6 பேருக்குத் தொற்று அடையாளம் காணப்பட்டு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## 3 ஆவது நாளாகவும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூரை மீது ஏறியுள்ளனர்.

கொரோனாவின் மூன்றாவது அலை சிறைச்சாலைக் கொத்தணியாகவும் உருவெடுத்துள்ள நிலையில், சிறைக் கைதிகள் சிலரைத் தனிமைப்படுத்தும் நோக்கில் அங்குணகொளபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட இருக்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமக்குக் கொரோனாத் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதால் கைதிகளை அழைத்துவர வேண்டாம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, அங்குணகொளபெலஸ்ஸ சிறைச்சாலையைச் சுற்றி விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நினைவேந்தலுக்கத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தடை செய்யுமாறு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, அதன் பின்னர் இடம்பெற்ற வாதங்களின் பின்னர் பொலிஸார் தாமாகவே முன்வந்து வழக்கில் இருந்து விலகுவதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் இன்று மீண்டும் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இன்று மாலை வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது குறித் வழக்கின் எதிராளிகள் சார்பில் வி.மணிவண்ணன் தலைமையிலான சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

அதன் பின்னர் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன. எனினும், இந்த வழக்கின் கட்டளையை நாளை வழங்குவதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## ஐ.நா. தீர்மானத்தி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

நல்லாட்சி அரசால்தான் நாடு கடந்த காலங்களில் காட்டிக்கொடுக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தினரால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு அவர்கள் அன்று இணை அனுசரணை வழங்கினார்கள்.

இது உலகிலேயே எங்கும் நடக்காத ஒரு விடயமாகும். இது இராணுவம் பெற்றுக்கொடுத்த அனைத்து வெற்றிகளையும் காட்டிக்கொடுக்கும் செயற்பாடாகும்.

எனினும், நாம் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த இணை அனுசரணையில் இருந்து விலகியுள்ளோம். எனவே, இதனால் நாட்டுக்கு எந்தவொரு ஆபத்தும் வராது.

இதனைக் கடந்த ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த அரசு நாட்டுக்கு செய்த அநியாயத்தை மாற்றியமைக்கும் பொருட்டே, எமது ஆட்சியைக் கொண்டுவந்தார்கள்.

நாம் பயங்கரவாதத்தைத் தோற்கடித்தவுடன், ஐ.நா.வின் அன்றைய பொதுச் செயலாளர் இலங்கைக்கு வந்தார்.

ஆனால், நாம் அவருடன் அன்று எந்தவொரு ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளவில்லை. மாறாக இணைந்த பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தி, ஒருங்கிணைந்த கருத்துக்களை மட்டும்தான் வெளியிட்டோம்.

இதனைத் திரிபுபடுத்தி, சொந்த நாட்டுக்கு எதிராகவே கருத்து வெளியிடக்கூடாது. நாடாளுமன்றுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், சர்வதேசம் என்று வரும்போது நாம் அனைவரும் ஒன்றிணைந்து தான் ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும். - என்றார்.

## திருமலை மீனவர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த படகு விபத்தில் உயிரிழந்துள்ளார் எனவும் காவற்துறையினர் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் திருகோணமலை, திருக்கடலூர் ஹர்தாஸ் வத்த பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் எனவும் காவற்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த மீனவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக காவற்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பேரினவாதப் பிதற்றல்!

*“மடியில் கனமில்லை என்றால் வழியில் பயம் ஏன்?”* என்று பழமொழி உண்டு.

அப்படி நியாயமான ஒரு கேள்வியை நாடாளுமன்றத்தில் வைத்து அரசுத் தரப்பிடம் எழுப்பியிருக்கின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இலங்கையில் தமிழ்த் தேசியத்தை இழிவுபடுத்தி, நலிவுபடுத்தி, கொச்சைப்படுத்தி, அழித்தொழிப்பதில் காலம் காலமாக பல சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் முன்னின்றிருக்கின்றார்கள். சிறில் மத்தியூ, நெவில் பெர்ணான்டோ என்று இந்த வரிசை நீண்டது. அந்தப் பட்டியலில், அடக்குமுறைப் பேரினவாதத்தைத் திமிரோடு பிரதிபலிப்பவர்கள் வரிசையில் அந்தப் பொறுப்பை இப்போது முன்னின்று ஏற்றிருப்பவர் முன்னாள் கடற்படை அதிகாரியும் உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சருமான சரத் வீரசேகரா.

பேரினவாதப் பேயுருவைத் தூண்டி, சிறுபான்மையினரான தமிழர்களின் தேசிய தனித்துவ உரிமைகளைக் கொச்சைப்படுத்தி, அடக்குமுறை எண்ணப் போக்கை நிலைநிறுத்தும் அவரது முயற்சியை –செயற்போக்கை – விதந்துரைக்கும் விதத்தில் பாதுகாப்புத் துறை தொடர்பான தனித்துவ அதிகாரங்களுடன் கூடிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக அவர் பதவி உயர்த்தப்படவிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

சிறுபான்மையினருக்கு அதிகாரத்தைப் பகிர வழி செய்யும் 13 ஆவது திருத்தத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று முழங்கி வரும் அவரது ‘சிங்கள வீரத்துக்கு’ பரிசாக இந்த அமைச்சர் பதவியுயர்வு இருக்கக் கூடும்.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற கொடூரங்களை மூடி மறைத்து வழமையாக அவர் பின்னும் புனைகதை நேற்றும் நாடாளுமன்றத்தில் ஒலிக்கத் தவறவில்லை.

*“இலங்கையில் யுத்தக் குற்றமே இடம்பெறவில்லை. உலகமே இதனை ஏற்றுக் கொண்டுள்ளது. சர்வதேசப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ்த் தலைவர்கள், தமிழ் அரசியல்வாதிகள் தமிழர்களை ஏமாற்றி வருகின்றனர்”* என்று முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைக்க எத்தனித்திருக்கின்றார் சரத் வீரசேகரா.

அவரின் இந்தப் பேச்சு நகைப்புக்கிடமானது. அவரது அறிவு மட்டத்தைப் பிரதிபலிப்பது.

சிங்கள அரசியல்வாதிகளில், சிங்களப் பேரினவாத்தின் அட்டகாசத்துக்கு ஆதரவு தெரிவித்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டங்களினிடையே – ஜெனீவாவில் – அதிகம் ரகளை செய்தவர் அவராகத்தான் இருக்கும்.

ஜெனீவாவில் கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பது அவருக்கு நிச்சயம் அத்துப்படியாகத் தெரியும். அதில் சந்தேகம் ஏதுமில்லை. அப்படிப்பட்டவர், சூரியனின் ஒளியை சாக்குப் போட்டு மூடி மறைக்க முடியும் என்ற மாதிரியில் கருத்துக் கூறுகின்றார்.

*“இலங்கையில் யுத்தக் குற்றமே இடம்பெறவில்லை. இதனை உலகமே ஏற்றுக் கொண்டுள்ளது”* என்ற அவரின் கூற்று அப்பட்டமான பொய். புனைகதை. சுத்துமாத்துப் பேச்சு.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று, ஒன்றுக்கு மூன்று தடவைகள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஏகமனதாக தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றது.

அத்தகைய சர்வதேச நியமங்களின் அடிப்படையிலான நீதி விசாரணைக்கு முழு அளவில் எதிர்ப்புத் தெரிவித்து, அதனை முன்னெடுக்காமல், காலத்தை இழுத்தடித்து நிற்கும் தென்னிலங்கைச் சிங்களம், இப்போது இலங்கையில் யுத்தக் குற்றங்களே இடம்பெறவில்லை என்று உலகம் நற்சான்றுப் பத்திரம் தந்திருப்பதாகக் காதில் பூச்சுற்ற முனைகின்றது.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மோசமான மனித உரிமை மீறல்கள் இம்பெற்றிருக்கின்றன. யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவை குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதி விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்துதான் சர்வதேச சமூகத்தின் – உலக நாடுகளின் – ஒரே நிலைப்பாடு.

இதனைத்தான் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் அடுத்தடுத்த நிறைவேற்றிய – ஏகமனதான நினைவேற்றிய – தீர்மானங்கள் மூலம் உலகம் பறைசாற்றி நிற்கின்றது.

அதை மூடி மறைத்துக் கதை விட முயலும் பேரினவாதியான அமைச்சர் சரத் வீரசேகரவை நாக்கைப் பிடுங்குகின்ற மாதிரி நான்கு கேள்விகள் கேட்டிருக்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.

*“நீங்கள் யுத்தக் குற்றம் செய்யவில்லை என்றால், உங்களால் உங்கள் நிலைப்பாட்டை உறுதியாக நியாயப்படுத்த முடியும் என்றால், அதற்கான ஆதாரங்கள் உள்ளனவென்றால், சர்வதேச விசாரணை ஒன்றை அனுமதிக்க ஏன் தயங்குகின்றீர்கள்?”* – என நாடாளுமன்றில் பகிரங்கமாக அவர் கேட்டிருக்கின்றார்.

இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவே கொழும்புக்கு ‘நற்சான்றுப் பத்திரம்’ வழங்கிய பின்னரும் சரத் வீரசேகரா போன்றோருக்கு உண்மை உறைக்கவில்லை என்பது துரதிரஷ்டமே.

# யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றதே அரசின் நிதி ஒதுக்கீடு!

## சபையில் கஜேந்திரன் சாடல்



யுத்தத்தால் அழிந்துபோன பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு தேவையான எந்த வித நிதி ஒதுக்கீடுகளையும் அரசாங்கம் செய்யவில்லை. “யானைப்பசிக்கு சோளப் பொரி” போல் சிறிதளவு நிதியை ஒதுக்குவதால் எதனையும் கட்டியெழுப்ப முடியாது. எனத் தமிழத்; தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில் –

யுத்தத்தால் அழிந்துபோன பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான எந்தவித நிதி ஒதுக்கீடுகளையும் அரசாங்கம் செய்யவில்லை. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் பெருமளவான அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. வடக்கில் மட்டும் 60 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன.

இந்தக் குடும்பங்கள், மாணவர்களின் வாழ்வாதாரங்களை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களும் கிடையாது. வடக்கில் “சி அன்ட் டி” தர வீதிகள் 840 கிலோ மீற்றர் நீளமானவை திருத்தப்பட வேண்டியுள்ளது. அதேபோன்று 8 ஆயிரத்து 567 கிலோ மீற்றர் நீளமான கிராமிய வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன.

அத்துடன் பல கைத்தொழிற்சாலைகளை புனரமைக்க வேண்டியுள்ளது. ஆனால் எதற்கும் நிதி ஒதுக்கப்படவில்லை. “யானைப் பசிக்கு சோளப்பொரி” போல் சிறிதளவு நிதியை ஒதுக்குவதால் எதனையும் கட்டியெழுப்ப முடியாது.– என்றார்.

# கொழும்பில் 2 ஆம் அலையின் பின் 12 ஆயிரத்து 248 குடும்பம் தனிமை!

கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை ஏற்பட்டதன் பின்னர் கொழும்பு மாவட்டத்தில்மாத்திரம் 12 ஆயிரத்து 248 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு 200 கோடி ரூபாவுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் பிரதீப் யசரன்ன தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை அரசாங்க தகவல்திணைக்களத்திலிருந்துஇணையவழியூடாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

கொழும்பு மாநகசபையை அண்மித்த பகுதிகளிலேயே தற்போது கொவிட் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. மார்ச் மாதம் இலங்கையில் முதலாவது தொற்றாளர் இனங்காணப்பட்டமையிலிருந்து 67 நாள்கள் கொழும்பு முழுமையாக முடக்கப்பட்டிருந்தது.

தற்போது ஒக்ரோபர் மாதம் இரண்டாவது அலை ஏற்பட்டதன் பின்னர் 12 ஆயிரத்து 248 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் 10 ஆயிரம் ரூபா பெறுமதி நிவாரம் வழங்கப்பட் டுள்ளது.

கொழும்பு நகரில் இதுவரையில் 13 பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் திம்பிரிகஸ்ஸாய பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 3 தொடர்மாடி குடியிருப்புக்களும் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 5 தொடர்மாடி குடியிருப்புக்களும் உள்ளடங்குகின்றன.

அத்தோடு மொரட்டுவை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொடர்மாடி குடியிருப்பொன்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தொடர்மாடி குடியிருப்புக்களில் 8 ஆயிரத்து 486 குடும்பங்கள் வாழ்கின்றன. இவற்றை மேலும் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. – என்றார்.

# தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகள் தேவையேற்படின் முடக்கப்படும்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொற்றாளர்கள் இனங்காணப்படுவார்களானால், அவர்களால் பெருமளவானோருக்கு எச்சரிக்கை ஏற்படுமாயின் அந்தப் பிரதேசங்களை மீண்டும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, மேல் மாகாணத்திலிருந்து மத்திய மலைநாட்டுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு விடுத்த அறிவித்தலை மீறி சிலர் அந்தப் பகுதிகளுக்குச் சென்றமையாலேயே மத்திய மாகாணத்தில் வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொழும்பிலிருந்து மத்திய மலை நாட்டை அண்மித்த பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தோம். எனினும் அந்த அறிவித்தலை மீறிச் சென்ற நபர் ஒருவரால் மஸ்கெலியாவில் தொற்று பரவல் ஏற்பட்டது.

இதே போன்று கொட்டாஞ்சேனையிலிருந்து சென்ற நபரொருவராலேயே நுவரெலியாவிலும் தொற்று இனங்காணப்பட்டது. தொற்றாளர் ஒருவர் சென்றமையாலேயே இந்த இரு பிரதேசங்களிலும் வைரஸ் பரவல் இனங்காணப்பட்டுள்ளதாக புலனாய்வுத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொற்றாளர்கள் இனங்காணப்படமாட்டார்கள் என்று கூற முடியாது. அவ்வாறு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால் அவர்களின் தொடர்புகள் தொடர்பாக ஆராய்ந்த பின்னர், பெருமளவானவர்களுக்கு பாதிப்பு ஏற்படுமென கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கமைய தேவையேற்படின் மீண்டும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். எச்சரிக்கை இல்லை என்றால் தனிமைப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட மாட்டாது.

இதே வேளை மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான வேலைத்திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகிறது. மத்திய கிழக்கிலிருந்து மாத்திரமின்றி ஏனைய நாடுகளிலிருந்தும் இலங்கையர்கள் அடுத்த வாரம் முதல் அழைத்து வரப்படுவார்கள்.– என்றார்.


## இந்தியா - சிங்கப்பூரின் போர்க் கப்பல்கள் அந்தமான் கடற்பகுதியில் கூட்டுப்பயிற்சி



வங்கக் கடலில் அந்தமான், நிகோபார் தீவுகள் அருகே இந்திய கடற்படையின் கப்பல்களான ராணா, கமோர்ட்டா, சிந்து கோஷ் நீர் மூழ்கிக் கப்பல் ஆகியவை சிங்கப்பூர் கப்பல்களுடன் கூட்டுப் போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளன.

சிங்கப்பூரின் ஸ்டெட்பாஸ்ட், என்டீவர் ஆகிய கப்பல்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

## இந்தியாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 92 லட்சம் கடந்தது!




இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளது. அந்தவகையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஒரேநாளில் 44 ஆயிரத்து 276 பேர் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 92 லட்சத்தைக் கடந்துள்ளது. இவர்களில் 86 லட்சத்து 41 ஆயிரத்து 404 பேர் குணமடைந்துள்ளனர். அத்துடன் 4 லட்சத்து 45 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொற்றாளர்கள் அதிகமாகக் குணமடையும் நாடுகளின் வரிசையில் இந்தியா முன்னிலை வகிக்கின்றது. மேலும் நேற்று ஒரேநாளில் 489 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து உயிரிழந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 743 ஆக அதிகரித்துள்ளது.

## தீவிர புயலாக நிவர் புயல்!



தென்மேற்கு வங்கக் கடலில் உருவான நிவர் புயல் தற்போது தீவிர புயலாக வலுப்பெற்றுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தை நோக்கி நெருங்கி வந்து கொண்டிருக்கும் நிவர் புயல் இன்று (புதன்கிழமை) மாலை கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் புயலின் தற்போதைய நகர்வு தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் கூறுகையில் -

தென்மேற்கு வங்கக் கடலில் உருவான நிவர் புயல் தற்போது தீவிர புயலாக வலுப்பெற்றுள்ளது.

அடுத்த 12 மணி நேரத்தில் இது அதி தீவிர புயலாக மாறும். அப்போது 155 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடிய வாய்ப்புள்ளது.

கடந்த 6 மணி நேரத்தில் மேற்கு நோக்கி 6 கி.மீற்றர் வேகத்தில் நகர்ந்து வருகிறது. இரவு 11.30 மணிக்கு கடலூருக்கு 310 கி.மீற்றர் தொலைவிலும், புதுவைக்கு 320 கி.மீற்றர் தொலைவிலும் இருந்தது. சென்னைக்கு 380 கி.மீற்றர் தொலைவில் நகர்ந்து வருகிறது.- எனத் தெரிவித்துள்ளது.

## நிவர் புயலால் பெங்களூருக்கு வெள்ள அபாய எச்சரிக்கை!

வங்கக் கடலில் உருவாகியுள்ள நிவர் புயல் அதி தீவிர புயலாக உருவெடுத்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை நோக்கி நகர்ந்து வருகிறது.

இன்று (புதன்கிழமை) இரவு கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் நிவர் புயலின் தாக்கத்தால் பெங்களூரில் வெள்ளம் ஏற்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று காலை முதலே தெற்கு உட்புற கர்நாடகா மாவட்டங்களில் மழை பெய்து வரும் நிலையில், பெங்களூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் இன்றும், நாளையும் கன மழை அல்லது மிகக் கன மழை பெய்யக்கூடும் என்பதால் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கோலார், சிக்கபல்லபுரா, ராம்நகரா, துமகுரு, மாண்டியா, சாம்ராஜ்நகர் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த மூன்று நாள்களுக்கு பெங்களூரில் பலத்த காற்று, இடியுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் எனவும் தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் தேங்கும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது

## திருமணத்துக்காக மதமாற்றம் செய்தால் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை!



திருமணத்துக்காக மதம் மாற்றம் செய்தால் 10 ஆண்டு வரை சிறை தண்டனை விதிக்கும் அவசர சட்டத்துக்கு உத்தர பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள சில முக்கிய விடயங்கள் தொடர்பாக அமைச்சர் சித்தார்த் நாத் சிங் தெரிவிக்கையில் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர் -

திருமணம் செய்வதற்காக மதம் மாற்றப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. சில இடங்களில் காதலித்து கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்யப்படுகிறது. இதனால் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையும் ஏற்படுகிறது.

இதைத் தடுக்கும் வகையில் திருமணத்துக்காக மதமாற்றம் செய்வதை குற்றமாக்கும் வகையில் அவசர சட்டம் அமுல்படுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின்படி மதமாற்றம் செய்தால் ஒன்று முதல் ஐந்து ஆண்டு சிறை, 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும். இளம் சிறுமியர் மற்றும் பழங்குடியின பெண்களை மதமாற்றம் செய்து திருமணம் செய்தால் 3 - 10 ஆண்டு சிறை 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும்.

ஒரு குழுவாக மதமாற்றம் செய்தால் அதில் ஈடுபடும் அமைப்புக்கு 3 - 10 ஆண்டு சிறை மற்றும் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும். அதே நேரத்தில் திருமணத்துக்குப் பிறகு மதம் மாறுவதற்கு அனுமதி அளிக்கப்படும். ஆனால் மாவட்ட ஆளுநரிடம் இரண்டு மாதங்களுக்கு முன்பே விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும்.- எனத் தெரிவித்துள்ளார்.


# கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை





**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1990.09.10
மதம் - இந்து V
நட்சத்திரம் - கார்த்திகை
பாவம் - 15
செவ் - 08இல்
கல்வி - பொறியியலாளர் (Engineer) மொரட்டுவ
தொழில் - விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி உத்தியோகப் பெண் தேவை

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1987.09.14
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரோனி
பாவம் - 33 1/2
சூ/செவ் - 10இல்
கல்வி - பட்டதாரி
தொழில் - ஆசிரியை
எதிர்பார்ப்பு - சூ/ செவ்வாய் உள்ள பட்டதாரி உத்தியோகம் தேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம் முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற் கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


## அயோத்தி விமான நிலையத்துக்கு ஸ்ரீ ராமர் பெயர் வைக்க ஒப்புதல்!

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள விமான நிலையத்துக்கு ஸ்ரீராமரின் பெயரை வைக்க அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

அயோத்தியில் உள்ள விமானநிலையத்தின் பெயரை மரியாதா புருஷோத்தம் ஸ்ரீராம் என பெயர் மாற்றும் முடிவை அமைச்சரவை எடுத் துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதற்காக உத்தரப்பிரதேச சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விமானப் போக்குவரத்து துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




## காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் அகமது படேல் கொரோனாவால் மரணம்

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் அகமது படேல் கொரோனா சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குருகிராம் வைத்தியசாலையில் கடந்த 15 ஆம் திகதி முதல் சிகிச்சை பெற்று வந்த அவர் இன்று அதிகாலை உயிரிழந்தார் என அவரது மகன் பைசல் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் இருந்து மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அகமதுபடேல் காங்கிரஸ் கட்சியின் பொருளாளராகவும் இருந்து வந்துள்ளார்.

சோனியாகாந்தியின் அரசியல் ஆலோசகராவும் செயல்பட்டு வந்துள்ளார். இவர் குஜராத்தில் இருந்து மக்களவைக்கு எட்டு முறையும், மாநிலங்களவை உறுப்பினராக 4 முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# பல போர்களை ஜோ பைடன் ஆரம்பிப்பார்




## சீனா தெரிவிப்பு

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பைடன், பல போர்களை ஆரம்பிப்பார் என சீன அரசாங்க ஆலோசகர் ஜெங் யோங்னியான் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகத்தில் மோசமடைந்த உறவு, பைடனின் ஆட்சிக் காலத்தின் போது சரிசெய்யப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக ஆலோசகர் ஜெங் யோங்னியான் கூறுகையில் –

அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடனின் நிர்வாகத்தின் கீழ், அமெரிக்காவுடனான அதன் உறவுகள் தானாகவே மேம்படும் என்ற மாயையை சீனா கைவிட வேண்டும். அத்துடன், அமெரிக்கா மேற்கொள்ளும் கடுமையான நிலைப்பாட்டை எதிர்கொள்ள சீனா தயாராக இருக்க வேண்டும். நல்ல பழைய நாள்கள் முடிந்துவிட்டன. அமெரிக்காவுடன் பல ஆண்டுகளாக நிலவும் பனிப்போர் ஒரே இரவில் முடிவுக்கு வராது.

பைடன், வெள்ளை மாளிகையில் நுழைந்த பின்னர் சீனா மீதான பொதுமக்களின் கோபத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அமெரிக்க சமூகம் சிதைந்துவிட்டது. இதனை சரிசெய்வதற்கு பைடனால் ஏதாவது செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை.

பைடன் நிச்சயமாக மிகவும் பலவீனமான ஜனாதிபதியாகவே இருப்பார். எனவே, உள்நாட்டு பிரச்சினைகளைத் தீர்க்க முடியாவிட்டால், அவர் இராஜதந்திர ரீதியாக ஏதாவது செய்வார். சீனாவுக்கு எதிராகவும் ஏதாவது செய்வார். ட்ரம்ப் போரில் ஆர்வம் காட்டவில்லை, ஆனால் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதியான பைடன் போர்களை ஆரம்பிப்பார். – எனக் கூறினார்.



## 35 புலம்பெயர்ந்தோருடன் படகு கவிழ்ந்து விபத்து!

மாக்ரெப் பிராந்தியத்தில் இருந்து கேனரி தீவுகளை நோக்கி 35 புலம்பெயர்ந்தோருடன் சென்று கொண்டிருந்த படகு ஒன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) கவிழ்ந்தது.

இந்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 28 பேர் மீட்கப்பட்டனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இன்னும் சிலர் காணவில்லை எனத் தெரிவித்துள்ள அதிகாரிகள் படகைத் தேடி வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

கேனரி தீவுகளில் குடியேறியவர்களின் வருகை இந்த ஆண்டு 17 ஆயிரம் ஆக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டின் மொத்தத்தின் பத்து மடங்கு இது என்றும் கூறப்படுகின்றது.

திறந்த வெளியில் தூங்கும் ஆயிரக்கணக்கானோரைத் தங்கவைக்க உள்ளூர் அதிகாரிகள் உதவி கோரியமையால், வருகையாளர்களுக்குத் தங்குமிடம் கட்ட உதவுவதாக ஸ்பெயின் அரசாங்கம் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜோ பைடனின் அமைச்சரவை!



அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ஜோ பைடன், வெளிவிவகார அமைச்சு உட்பட தனது அமைச்சரவையில் இடம் பெறக் கூடியவர்களின் பெயர்ப் பட்டியலை அறிவித்துள்ளார்.

நீண்ட இழுபறிக்கு பின் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோ பைடன் வெற்றிபெற்றார் என அறிவிக்கப்பட்ட நிலையில் அடுத்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாகப் பதவி ஏற்கவுள்ளார்.

இந்நிலையில் ஜோ பைடன் தனது தலைமையில் அமையவிருக்கும் புதிய அமைச்சரவை தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவிப்பை இன்று வெளியிடுவார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதன்படி, வெளிவிவகார அமைச்சராக அன்டனி பிளின்கென்னையும் வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகத் தனது மூத்த ஆலோசகர்களில் ஒருவரான ஜாக் சல்லினையும் நியமிக்கவுள்ளார்.

மேலும் முன்னாள் அமெரிக்க தலைமை தூதுவர் ஜோன் கெரியைத் தனது சிறப்பு தூதராகவும், அலெஜான்ட்ரோ மயோர்காசை உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சராகவும் தெரிவு செய்துள்ளார்.


இதேவேளை முன்னாள் துணை சி.ஐ.ஏ. இயக்குநரான அவ்ரில் ஹைன்ஸை தேசிய புலனாய்வு பணிப்பாளராகவும் அவர் தெரிவுசெய்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## அமெ. அமைச்சரவை அதிகாரியின் தாய்வான் பயணம் ஒத்திவைப்பு!

அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் அமைச்சரவை மட்டத் தலைவர் அண்ட்ரூ வீலர், தாய்வான் பயணத்தை ஒத்திவைத்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த விஜயத்தை ஒத்திவைத்துள்ளதாக அறிவித்துள்ள அவரது அலுவலகம் சீனாவுடன் பிரச்சினை என்றகூற்றுக்களை நிராகரித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்திலிருந்து ஒரு மூத்த அமெரிக்க அதிகாரி மேற்கொள்ளவிருந்த மூன்றாவது பயணமாக இது கருதப்படும் நிலையில் ஜனநாயக தீவை தனது சொந்தமாகக்கூறும்சீனா இந்த விஜயத்துக்கு கடும் ஆட்சேபனையைஎழுப்பியது.



இந்த வருகை சாதகமாகஅமையவில்லை என்றபோதும் அமெரிக்க அதிகாரிகளின் எதிர்கால உயர் மட்ட பயணங்களை வரவேற்பதாக தாய்வானின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடனின் அரசாங்கத்துடன் தாய்வான் அதன் சுற்றுச்சூழல் ஒத்துழைப்பைத் தொடரும் என்றும் தாய்வான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காதார செயலாளர் அலெக்ஸ் அசாரின் தைபேக்கான விஜயத்தின்போது கடும் ஆட்சேபனையை எழுப்பிய சீனா, செப்ரெம்பர் மாதம் அமெரிக்க துணை இராஜாங்க செயலாளர் கீத் கிராச் வருகையின்போது போர் விமானங்களை எல்லையில் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நியூஸிலாந்தில் 100 திமிங்கலங்கள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கின



நியூஸிலாந்தின் கிழக்கு கடற்கரை பகுதியில் உள்ள சதம் தீவுகளில் சுமார் 100 பைலட் திமிங்கலங்கள் மற்றும் பாட்டில்நோஸ் டொல்பின்கள் கரையொதிங்கின என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதி தொலைதூரத்தில் இருப்பதால் மீட்பு முயற்சிகள் தடைப்பட்டுள்ளன என்றும் அவர்கள் இன்று (புதன்கிழமை) தெரிவித்துள்ளனர்.


அத்தோடு இந்தக் கூட்டத்தில் மொத்தம் 97 பைலட் திமிங்கலங்கள் மற்றும் மூன்று டொல்பின்கள் உயிரிழந்துவிட்டன எனவும் நியுஸிலாந்தின் பாதுகாப்புத் துறை அறிவித்துள்ளது.

இந்த இடத்தில் 26 திமிங்கிலங்கள் மட்டுமே இன்னும் உயிருடன் இருக்கின்றன எனவும் அதில் பெரும்பாலானவை மிகவும் பலவீனமடைந்துள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கடந்த 1918 ஆம் ஆண்டில் 1,000 ஒரே இழையில் உயிரிழந்தன எனவும் அங்கு இது வழக்கமாக இடம்பெறும் நிகழ்வு என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அண்மையில் உலகின் மிகப் பெரிய நூற்றுக்கணக்கான திமிங்கலங்கள் ஆஸ்திரேலிய ஆழமற்ற கடற்கரையில் நீரில் சிக்கித்தவித்து உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்விச் சலுகைகள் கோரி பொலிவியாவில் போராட்டம்



பொலிவியாவின் கோச்சபம்பா நகரில், போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே வன்முறை வெடித்ததில் அப்பகுதி போர்களமாக காட்சி அளித்தது.

அங்குள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள் வழங்கக்கோரி நகராட்சி அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டனர். பாதுகாப்பு கவசங்களுடன் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் போராட்டக்காரர்களை அகற்ற முயன்றனர்.

இதனால் இரு தரப்புக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டதோடு, பொலிஸார் மீது பொதுமக்கள் பொருள்களை வீசியெறிந்தனர்.

பின்னர் பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி போராட்டக்காரர்களைக் கலைத்தனர்.

## பாகிஸ்தானில் பாலியல் வழக்கில் சிக்குபவர்களுக்கு ஆண்மை நீக்கம்

### பிரதமர் இப்ரான்கான் அதிரடி

பாகிஸ்தானில் பலாத்கார வழக்கில் சிக்கும் குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யும் தண்டனை சட்டத்திற்கு பிரதமர் இம்ரான்கான் ஒப்புதல் அளித்துள்ளார்.

இது தொடர்பாக அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில், பாலியல் குற்றவாளிகளுக்கு விரைவான, கடுமையான தண்டனை வழங்கக் கொள்கை அளவில் இம்ரான் ஒப்புதல் அளித் தார் எனக் குறிப்பிட்டுள்ளது.

ஆண்மை நீக்க தண்டனை வழங்கப்படுவது ஆரம்பமாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ள ஆளும் கட்சி செனட்டர் பைஸல் ஜாவித் கான், இதுதொடர்பாக விரைவில் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படும் என்றும் கூறியுள்ளார்.

## சிறுவருக்கு எச்சில் மூலம் கொரோனாப் பரிசோதனை!

துபாய் சுகாதார ஆணையத்தின் சார்பில் சிறுவர்களுக்கு எச்சில் மூலம் கொரோனா பரிசோதனை செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த பரிசோதனை 3 வயது முதல் 16 வயதுடைய சிறுவர், சிறுமிகள் செய்து கொள்ளலாம் என்றும் இதற்கு 150 திர்ஹாம் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனை மூலம் 24 மணி நேரத்தில் முடிவுகள் தெரிந்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# என் உயிர் இருக்கும்வரை மக்கள் பணி செய்வேன்!

## பிணையில் வந்த பிள்ளையான் ஊடகங்களுக்குத் தெரிவிப்பு



கொழும்பு, நவ.25

மக்களோடு மக்களாக நின்று என்னுடைய உயிர் இருக்கும்வரை மக்கள் பணி செய்வேன் என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் கடந்த ஐந்து வருடங்களாக சிறையிலிருந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் அவரது சாகாக்களும் நேற்று செவ்வாய்க்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

நீதிமன்ற வளாகத்தில் இருந்து வெளியேறிய பின்னர், ஊடகங்களுக்கு தனது விடுதலை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர் -

என்னுடைய வழக்கு திட்டமிட்ட ஒரு பழிவாங்கல். அதை இன்றுதான் நீதிமன்றம் உணர்ந்திருக்கின்றது. ஏற்கனவே நாங்கள் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் போல மக்களோடு மக்களாக நின்று என்னுடைய உயிர் இருக்கும்வரை மக்கள் பணி செய்வேன். என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு மாத்திரமன்றி என்னை நம்பி நான் வெளியில்வர வேண்டுமென பிரார்த்தனை செய்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி எனத் தெரிவித்தார்.

இந்த வழக்கில் நேற்று செவ்வாய்கிழமை ஆஜராகிய யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் பற்றி ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது -

உங்களுக்கு சுமந்திரன் யார் எனத் தெரியும். அவர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், நான் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். அவருக்கு கிடைத்த வாக்குகள் என்ன? எனக்கு கிடைத்த வாக்குகள் என்ன? அவருடைய வாதம் என்னவென்றால் பிள்ளையான் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர், ஆகவே அவரை வெளியில் விடக்கூடாது என்பது.

அப்படியாயின் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அப்பாவிகளும் விடுதலை செய்யப்படாத ஒரு நிலையே உருவாகும். ஆகவே அவரது வாதத்தை வேடிக்கையான ஒரு விடயமாகவே நான் பார்க்கிறேன் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# நீதிமன்ற வளாகத்தில் அச்சுறுத்தப்பட்ட தாய்!

தனது மகனை பிரிந்து 16 வருடங்களாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மாறுவேடங்களுடன் சென்று மீட்ட எனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக சுனாமியில் காணாமல் போன மகனை கண்டுபிடித்த தாயான அபுசாலி சித்தி ஹமாலியா தெரிவித்தார்.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்கு தவணைக்காக சென்ற நிலையில் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

மகனுக்காக ஏங்கும் தாய்மாரின் கோரிக்கையை ஏற்று மரபணு பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி வரை சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.எம் றிஸ்வி வழக்கை ஒத்திவைத்தார்.

நேற்றைய வழக்கு விசாரணைக்காக ஒரு தரப்பினர் சமுகமளிக்கத் தவறியமையையடுத்து அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டதுடன் வழக்கு பிற்போடப்பட்டது.

இதன் போது சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.எம் றிஸ்வி முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சம்மாந்துறை பொலிஸார் வழங்கிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு விசாரணையை நீதி



வான் மேற்கொண்டிருந்தார்.

இதன் போது சிறுவனின் வளர்ப்பு தாய் என உரிமை கோரும் நூறுல் இன்ஷான் நேற்றைய விசா ரணைக்காக வருகை தரவில்லை. சுனாமியில் மகனை பறிகொடுத்ததாக தெரிவித்த அபுசாலி சித்தி ஹமாலியா மாத்திரம் நேற்று ஆஜராகி இருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கினை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்துள்ளார்.

இதேவேளை வழக்கு நிறைவடைந்து சுனாமியில் மகனை பறிகொடுத்ததாகத் தெரிவித்த அபுசாலி சித்தி ஹமாலியா நீதிமன்றுக்கு வெளியில் வருகை தந்திருந்த போது சிறுவனின் வளர்ப்பு தாய் என உரிமை கோரும் நூறுல் இன்ஷானின் முன்னாள் கணவன் தன்னை அச்சுறுத்தும் வண்ணம் நடந்து கொண்டார் என ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தல் ஊரடங்குப் பகுதிகளில் மனிதாபிமானமின்றி செயற்படுகிறது அரசு!

## மக்கள் வேதனையில் என்கிறார் சஜித்

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கும் பிரதேசங்களில் வாழும் மக்கள் தொடர்பில் அரசாங்கம் கடைப்பிடித்து வரும் மனிதாபிமானமற்ற நடவடிக்கையாலே மக்கள் குழப்பமடைந்திருக்கின்றனர். நாங்கள் மக்களை குழப்பியதாக தெரிவிக்கப்படும் செய்தியை முற்றாக நிராகரிக்கின்றேன் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற்கட்டளை 27 - 2இன் கீழ் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கொவிட் தனிமைப்படுத்தல் பிரதேசங்களில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாகவும் அதற்காக அரசாங்கம் எடுத்துவரும் தீர்வுகள் தொடர்பாகவும் பல கேள்விளை முன்வைத்தார். அந்தக் கேள்விகளுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு பதிலளிப்பதாக ராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துவிட்டு, எதிர்க்கட்சி தலைவர் மக்களைக் குழப்பக்கூடாது என குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

கொவிட் தனிமைப்படுத்தல் சட்டத்தால் மேல்மாகாணத்தில் குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் பாரியளவில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மக்களின் அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. வீடுகளுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் மக்களின் அன்றாட வாழ்க்கைச்செலவுக்காக அரசாங்கத்தின் 5ஆயிரம் ரூபா ஒரு மாதத்துக்கு போதுமானதல்ல. அரசாங்கத்தின் நடவடிக்கையால்தான் மக்கள் கொவிட்டையும் கண்டுகொள்ளாமல் குழப்படைந்து வீதிக்கிறங்க முற்படுகின்றனர்.

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தமைபோல் மக்



களைக் குழப்ப எங்களுக்கு எந்த தேவையும் இல்லை. மக்கள் எதிர்நோக்கியுள்ள கஷ்டத்தில் அரசியல் செய்யும் தேவை எமக்கில்லை. அரசாங்கத்தால் வழங்கப்படும் 5ஆயிரம் ரூபாவை 30 நாள்களுக்கு பிரித்து செலவழிக்கவேண்டும் என அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவரே தெரிவித்திருக்கின்றார்.

அரசதரப்பின் இவ்வாறான பேச்சுக்களால்தான் மக்கள் ஆத்திரமடைந்து குழப்பமடைகின்றனர். அதனால் அரசாங்கம் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் தொடர்பில் மனிதாபிமானத்துடன் செயற்படவேண்டும். - என்றார்

# கண்டி நகரில் கொரோனா உச்சம்; அனைத்துப் பாடசாலைகளும் மூடு

கண்டி நகரில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் மூடப்படவுள்ளன என்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே அறிவித்துள்ளார்.

அதன்படி நாளை வியாழக்கிழமை தொடக்கம் டிசம்பர் 4ஆம் திகதி வரை கண்டி நகர பகுதியில் உள்ள 45 பாடசாலைகளை இவ்வாறு மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

கண்டியில் கடந்த சில நாட்களாக சடுதியாக அதிகரிக்கும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொது இடங்களில் ஒன்றுகூடி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்பாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால், அந்த அமைப்பின் நினைவு நாளை நடத்துவது தேசிய பாதுகாப்பிபுக்கு அச்சுறுத்தலானது எனவும் நீதிமன்றம் இதன்போது தெரிவித்துள்ளது.

நவம்பர் 27ஆம் திகதி உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்குத் தடை விதிக்கக் கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு இன்று முற்பகல் 11 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீண்ட வாதப்பிரதிவாதங்கள் நடந்தன. அதனைத் தொடர்ந்து, வழக்கின் தீர்ப்பு பிற்பகல் 3 மணிவரை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரிஷாத்துக்குப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் அவர் இன்று ஆஜர்ப்படுத்தப்பட்டபோது பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் ரூபா காசுப் பிணையிலும், தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் அவரை விடுதலை செய்யுமாறு நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அரச பணத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி - தேர்தல் சட்டத்தை மீறி இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் மூலம் புத்தளத்தில் இருக்கும் வாக்காளர்களை மன்னாருக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதனை அடிப்படையாகக் கொண்டு, பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த ஒக்டோபர் 19ஆம் திகதி ரிஷாத் பதியுதீன் தெஹிவளையில் மறைந்திருந்தபோது கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிந்திய செய்தி**

# கிளிநொச்சியில் 04பேருக்கு தொற்று

**(நா.லோகதாயாளன்)**

**இன்று கிளிநொச்சியில் கொரோனாத் தொற்றுப் பரிசோதனையில் 04 பேருக்கு தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.**

**மேலதி விவரம் காலைப்பதிப்பில் ...**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.11.2020 இல் வெளியிடப்பெற்றது.